# ஐப்பசி மாதத்திற்கான இறைவேண்டலுக்கான கைக்கொடுத்தல்

***"அவர்கள் கண்ணால் காணாமலும் உள்ளத்தால் உணராமலும் மனம் மாறி குணமாகாமலும் இருக்கும்படி அவர்களுடைய கண்ணை மூடச் செய்தார். உள்ளத்தை மழுங்கச் செய்தார்"*** *(பு.யோவான் 12:40 ஏசாயா 6:10 )*

இறைவன் என்பவர் அன்பு. அதுபோல் அவர் தூயவர். மாறுபட்டவர். அவர் மனிதனை அளவின்றி அன்பு செய்வது போன்றே அவர், அவரினின்று தூர விலகி அகங்காரத்துடன், பிடிவாதத்துடன், பொய் தெய்வங்களை உருவாக்கிக் கொண்டு அவற்றிற்கு வந்தனை நமஸ்காரம் செய்வதற்கு முற்படுகிறவர்களுக்கு அதிகமாக தண்டனை கொடுப்பது மாத்திரமன்றி அவர்கள் அழிவிற்கு உட்படுவதற்காக கொடூரமாக செயல்படுவாரென பழைய உடன்பாடு வாசிக்கையில் அவ்வாறான சந்தர்ப்பங்களை அதிகமாக நம்மால் காணமுடியும்.

இன்று பிரதான தலைப்பின் வார்த்தை வழியாக புனித யோவான் ஆதிகாலத்தில் இருந்த எசாயா இறைவாக்கினர் வெளிப்படுத்திய இறைவனுக்கு கீழ்படியாதவர்களுக்கு கிடைக்கும் அழிவினை மேலெழுப்பிக் காட்டுகிறார்.

இருப்பினும் இறைவன் மிகவும் பரிவிரக்கத்துடன் தனது ஒரேபேறான மகன் இயேசுக்கிறிஸ்து ஆண்டவரை இவ்வுலகிற்கு அனுப்பி, முழு மனித சமுதாயத்தின் பாவத்தை அவர் மேல் சுமத்தியவாறு அவரது பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பின் மூலம் இறை உதாசீனத்தை கட்டுப்படுத்தினார்.

இருப்பினும் இவ்வாறான நற்செய்தி கிடைத்தும் கூட கிறிஸ்தவர்கள் எனப் பெயர் கொண்ட அதிகமானோர் உலகமாயைகளுக்கு அடிமைபட்டு வாழ்கிறார்கள். அதுபோலவே கிறிஸ்தவன் எனும் பெயர் தாங்கிய அதிகாரிகள், அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள் ஆகியோர் இறைவிருப்பத்திற்கு விரோதமாக செயல்படுவது தூய ஆவியானவருக்கு எதிராக செய்யும் பாவமாகும்.

இறைவேண்டல் ஊழியர்கள் என்றவகையில் இம்மாதம் முழுவதும் இறைவனின் பரிசுத்த திருவுளத்திற்கு அடிபணியாமல் உலகதேவைகளின் பின்னால் விரட்டிச் செல்லும் கிறிஸ்தவ பெயர் தாங்கியவர்களைப் போல் மக்களின் பணத்தை கொள்ளையடித்த வண்ணம் தங்கள் மடியை கனப்படுத்திட முயற்சி செய்யும் அரசியல் தலைவர்களின் கண்கள் குருடாகி இறை உதாசீனத்திற்கு ஆளாகாமல் உண்மையான மனஸ்தாபத்திற்கு உள்ளாகிடுவதற்காகவும் தொடர்ச்சியாக செபிப்பதோடு நாமும் எமது பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டு செபத்தில் வேண்டுவோம்.

**"என் பெயரை போற்றிடும் என் மக்கள் சிறுமையுற்று தங்கள் பாவங்களிலிருந்து மனம் வருந்தி இரந்து மன்றாடி என் திருமுகத்தை நாடினால் வானகத்திலிருந்து அவர்களது மன்றாட்டுக்களை கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன். அவர்களது நாடடுக்கு நலன் அளிப்பேன்"** (2 குறிப்பேடு 7:14)

**முதலாம் வாரம்** தியானவாசிப்பு :- புனித யோவான் 12:37-43

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-
கிறிஸ்தவ பெயர் தாங்கிய திருமுழுக்குப் பெற்று இன்று அவரினின்று தூர விலகி உலகை வந்தனை செய்யும் எமது தேசத்தின் வல்லமை பொருந்தியவர்களைப் போன்று அவ்வாறான கிறிஸ்தவர்களுக்காக (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள் :-

- மாதத்தின் முதலாம் ஞாயிறில் நடைபெறும் சங்கம குடும்ப தினம் மற்றும் வார்த்தையின் ஊழியர்களுக்காக
- சுவாமி அப்பா, இறைவாக்கினர் குழு, சுசமத குழு, துணையாளர் குழு உள்ளிட்ட புபுதுவையில் பொறுப்பேற்றிருக்கும் அனைவருக்காகவும்.
- ஐப்பசி மாதம் 05ம் திகதி அதாவது போயா தினத்தில் தூரப்பிரதேசங்களில் நடைபெறும் சங்க தினங்கள், பிரசங்சாராமயில் நடைபெறம் சிறுவர் துணையாளர் கூட்டம் மற்றும் பாடல், ஆடல், சங்கீத, ஏவிசிகுழுக்களில் பங்குபெறும் அனைவருக்காகவும்
- ஐப்பசி 8ம் திகதி ஞாயிறு ஸ்ரீ பிரசங்சாராமயில் நடைபெறும் மாணவிகளின் ரெலியில் கலந்து கொள்ளும் அனைத்து மாணவிகளுக்காகவும்
- வெளிநாடுகளில் புபுது சங்கங்கள் மற்றும் அந்தந்த சங்கங்களில் நடைபெறும் இறைவேண்டல் குழுக்களில் உள்ளோருக்காக வேண்டி
- ஏனைய வேண்டுதல்கள்……

**இரண்டாம் வாரம்** தியானவாசிப்பு :- உரோமர் 3: 21-28

வேண்டுதலுக்கான விசேட நோக்கு :-

பாவத்தின் அடிமைகட்டுக்களுக்கு அகப்பட்டு அதிலிருந்து மீள்வதற்கு வழி தேடும் அனைத்து மக்களுக்காகவும். (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள் :-

- ஐப்பசி மாதம் ஸ்ரீபிரசங்சாராமயில் நடக்கவிருக்கும் தமிழ் பேசும் சுகோதர சகோதரிகளின் பாசறைக்காகவும் வார்த்தையின் ஊழியர்களுக்காகவும்.
- புபுது இளைஞர் யுவதி, மாணவ மாணவியரின் குழுக்களுக்கு சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மற்றும் அந்தந்த பகுதிகளில் பொறுப்பாகவுள்ள அனைவருக்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்…….

**மூன்றாம் வாரம்** :- தியானவாசிப்பு புனித யோவான் 12: 44-50

வேண்டுதலுக்கான விசேட நோக்கு

புபுது வாழ்க்கையினின்று தூர விலகி இருக்கும் அனைவருக்காவும் (10 நிமிடம்)

வேறுவேண்டுதல்கள்

- புபுது வாழ்க்கை வாழ்ந்து தற்போது செயலிழந்து இருக்கம் அனைவருக்காகவும்.
- ஶ்ரீ பிரசங்சாராமய, ரம்யாராமய, தர்மாராமய உள்ளிட்ட புபுது வீடுகள் மற்றும் மத்திய நிலையங்களிலிருந்தவாறு தூது சேவையில் ஈடுபடும் அனைவர் மற்றும் புபுது காரியாலயங்களில் வேலை செய்யும் அனைவருக்காகவும்.
- சுபெந்தி, சுரெந்தி, சுமெதி, சபெந்தி சங்கங்களை சேர்ந்த அனைவருக்காகவும்.
- ஏனைய வேண்டுதல்கள்……..

**நான்காம் வாரம்** :- தியானவாசிப்பு 2 கொரிந்தியர் 5: 16-31

வேண்டுதலுக்கான விசேட நோக்கு:-

தேசத்திற்காக (10 நிமிடம்)

வேறு வேண்டுதல்கள் :-

- தூய ஆவியில் பயண சஞ்சிகைக்கு கடிதமெழுதும் அனைவருக்கும், தயாரிப்போர், புபுது அச்சகத்திலுள்ளோர் அனைவருக்காகவும் திட்டமிடல் சேவையில் உள்ளோர் அனைவருக்காவும்
- ஐப்பசி மாதம் 28-29 தினங்களில் பிரசங்சாராமயில் நடைபெறும் தந்தைமார் ஞானஒடுக்கத்திற்காக சம்பந்தப்பட்ட அனைவருக்காகவும்
- ஏனைய வேண்டுதல்கள்……

***“நீ எந்நிலையிலிருந்து தவறி விழுந்துவிட்டாய் என்பதை நினைத்துப் பார். மனம்மாறு. முதலில் நீ செய்துவந்த செயல்களை இப்பொழுதம் நீ செய். நீ மனம் மாறத் தவறினால், நான் உன்னிடம் வந்து உனது விளக்குத் தண்டை அது இருக்கும் இடத்திலிருந்து அகற்றிவிடுவேன்” (திருவெளிப்பாடு 2:5)***

இறைவேண்டல் மற்றும் நடுநிலை சேவை